திருச்சி மணப்பாறை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் செயல்பாடுகள்: கலெக்டர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு

திருச்சி, ஆக.19– திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் செயல்பாடுகளையும் மேலும், பிரதம மந்திரி கிஷான் திட்டத்தின் கீழ் ekyc மற்றும் ஆதார் எண் வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்கப்படும் செயல்பாடுகளையும் மேலும் அனைத்து விவசாயிகளையும் தொடர்பு கொண்டு ekyc செய்திடவும். ஆதார் எண்ணை அவர்களது வங்கி கணக்கு எண்ணுடன் இணைக்க உரிய நடவடிக்கை எடுத்திட சம்மந்தப்பட்ட துறை அலுவலா்களுக்கு அறிவுறுத்தினார்.

தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்கள் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஈடு செய்திடும் வகையிலும் அவா்களின் வாழ்வாதாரம் மீட்டும் வகையிலும் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெல் (சம்பா), மக்காசோளம், பருத்தி ஆகிய பயிர்களுக்கு நவம்பர் 15 தேதிக்குள் பயிர்காப்பீடு செய்திட விவசாயிகளுக்கு விழிப்புணா்வு ஏற்படுத்திடவும், மேலும் இப்பருவத்திற்கு தேவையான நெல், சோளம், கடலை, உளுந்து போன்ற விதைகளை, நுண்ணூட்ட சத்து, உயிர் உரங்கள் ஆகியற்றை போதுமான அளவில் இருப்பு வைத்து விநியோகம் செய்திட அலுவலா்களுக்கு கலெக்டர் அறிவுரை வழங்கினார்.

தொடா்ந்து, தோட்டக்கலைத் துறையின் கீழ் ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கத்தின் கீழ் கத்தரி, தங்காளி, மிளகாய், வெண்டை, கீரைகள், கொத்தவரை ஆகிய 6 வகையான விதைகள் அடங்கிய விதை தளைகள் தொகுப்பு மற்றும் மாடித்தோட்ட தளைகள் ஆகியவற்றை உடன் விநியோகம் செய்திட அறிவுறை வழங்கினரர்.

இந்நிகழ் வின்போது கலெக்டரின் நோ் முக உதவியாளா் (வேளாண்மை) ஜெயராணி, வேளாண்மை உதவி இயக்குநா் மோகனா, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநா் (மணப்பாறை) சிவராமகிருஷ்ணன், மணப்பாறை வட்டாட்சியா் சுந்தரபாண்டியன் உள்ளிட்ட அரசுத்துறை அலுவலா்கள் பலா் உடனிருந்தனா்.

ராமநாதபுரம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் அண்ணா திமுக 54 ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் கோட்டைச்சாமி தலைமையில் கிளைக்கழங்களில் கட்சி கொடி ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கும் கழகத்தினருக்கும் இனிப்புகள் வழங்கி தீபாவளி பரிசாக புத்தாடைகள் வழங்கப்பட்டன இந்நிகழ்வில் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு நாள் கூட்டம்

தூத்துக்குடி, அக்.18– தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் மனு றாள் கூட்டம் போலீஸ் சூப்பிரண்ட் ஆல்பர்ட் ஜான் தலைமையில் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அலுவலக த்தில் நடைபெற்ற மனு நாள் கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் நிலையங் களில் புகார் அளித்த 10 மனுதாரர்கள் மற்றும் புதிதாக மனு கொடுக்க வந்த 63 மனுதாரர்கள் என மொத்தம் 73 மனுதாரர்கள் தங்கள் குறைகளை மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் ஆல்பர்ட் ஜான் அவர்களிடம் நேரடியாக தங்களது புகார் மனுவினை அளித்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் மனுக்கள் மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கு மாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ramco

ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்

(CIN: L72300TN1997PLC037550)

பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108.

கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113.

E-mail : investorrelations@ramco.com Website: www.ramco.com

PHONE: +91 44 2235 4510/6653 4000, Fax: +91 44 2235 2884

காகித வடிவிலான பங்குகள் தொடர்பான பரிமாற்ற கோரிக்கைகளை மீண்டும் வைப்பதற்கான சிறப்பு சாளரம்

ஜூலை 2, 2025 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண்.SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97ன் படி, ஏப்ரல் 1, 2019க்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட, ஆவணங்கள்/செயல்முறை/அல்லது வேறுவிதமாகக் குறைபாடு காரணமாக நிராகரிக்கப்பட்ட/திருப்பி அனுப்பப்பட்ட/கவனிக்கப்படாத பரிமாற்றப் பத்திரங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு ஒரு சிறப்புச் சாளரம் திறக்கப்பட்டுள்ளது என்பது குறித்து பங்குதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வசதி ஜூலை 7, 2025 முதல் ஜனவரி 6, 2026 வரை கிடைக்கும்.

பங்குதாரர்கள் இது சம்பந்தமாக ஜனவரி 6, 2026க்கு முன்பாக பின்வரும் முகவரியில் RTA வில் மீண்டும் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், :

கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் (யூனிட்: ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்)

'சுப்பிரமணியன் பில்டிங்', எண்.1, கிளப் ஹவுஸ் சாலை,

சென்னை – 600002. தமிழ்நாடு, இந்தியா

தொலைபேசி: +91 44 4002 0700

ஆன்லைன் முதலீட்டாளர் போர்டல்: https://wisdom.cameoindia.com

இணையதளம் : www.cameoindia.com

கோரிக்கை வைப்பவர் ஒரு டீமேட் கணக்கை வைத்திருக்க வேண்டும் மற்றும் RTA வில் பரிமாற்றத்திற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது, பரிமாற்ற ஆவணங்கள் மற்றும் பங்குச் சான்றிதழுடன் அதன் வாடிக்கையாளர் முதன்மை பட்டியலை ('CML') வழங்க வேண்டும்.

ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டிற்காக

ஒப்பம்/-

இடம் : சென்னை **மிதுன் வி**

தேதி : அக்டோபர் 17, 2025 **நிறுவனச் செயலாளர்**

அண்ணா திமுக 54–ம் ஆண்டு தொடக்க விழா: ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் கொண்டாட்டம்

மதுரை அக்.18– அண்ணாதிமுக வின் 54 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு நேற்று காலை ஓபிஎஸ் அணி சார்பில் மாவட்ட கழக செயலாளர் ஆர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் கொண்டாடப்பட்டது. முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் ஆலோசனைக்கிணங்க அண்ணா திமுகவின் 54 ஆம் ஆண்டு தொடக்க விழா தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது அதன் அடிப்படையில் மதுரை கே.கே நகரில் உள்ள எம்ஜிஆர் ஜெயலலிதாவின் திருவுருவ சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் புறநகர் மாவட்ட கழகச் செயலாளர் முருகேசன், மாரிச்சாமி ,துதி திருநாவுக்கரசு, தங்கச்சாமி, ஜீவ சன்மார்க்கம், ராகவன், ஜோதி, கொட்டாம்பட்டி சின்னப்பா. அனைத்து கிளைகழக செயலாளர்கள் அ.இ.அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பவர், ஸ்டைல், மரபு புதிதாய் வடிவமைக்கப்பட்ட புத்தம் புதிய ஸ்கோடா ஆக்டேவியா கார்: வாடிக்கையாளர்களுக்கு நவம்பர் 6 முதல் விற்பனை

திருச்சி, அக். 18– ஸ்கோடா ஆட்டோ இந்தியா இந்தியாவில் தனது 25 ஆண்டு பயணத்தை கொண்டாடுகிறது. இது உண்மையான வரலாற்றுச் சின்னமான, புதிய ஆக்டேவியா ஆர்எஸ் இன் மீள்வருகையை குறிக்கிறது.. முழுவதும் கட்டமைக்கப்பட்ட யூனிட்டாக குறைந்த எண்ணிக்கையிலேயே கிடைக்கும் ஆக்டேவியா ஆர்எஸ், சிறந்த ஓட்டும் அனுபவம், துணிச்சலான வடிவமைப்பு மற்றும் தனித்துவமான ஆர்எஸ் பாணியை வெளிப்படுத்துகிறது. இந்தியாவில் ரசிகர்களுக்காக ஒரு தனிப்பட்ட அடையாளமாக திரும்ப வருகிறது. வெளியீட்டு விழாவில் ஸ்கோடா ஆட்டோ இந்தியா பிராண்ட் டைரக்டர் ஆஷிஷ் குப்தா கூறுகையில் :

"ஆக்டேவியா ஆர்எஸ் க்கு பெற்ற ரெஸ்பான்ஸ் அற்புதமாக உள்ளது.. இந்த ஐகானிக் மாடல் இந்திய ஓட்டுனர் ரசிகர்களின் ஆர்வத்தை தூண்டி, உலகளாவிய ஆக்டேவியா ஆர்எஸ்ன் புகழ்பெற்ற அந்தஸ்தை உறுதிப்படுத்துகிறது. ஸ்கோடா ஆட்டோ இந்தியாவில் 25 அற்புதமான ஆண்டுகளை கொண்டாடும் போது, உலக தரத்திற்குரிய கார்கள் வழங்கும் எங்கள் உறுதி முன்பு போலவே வலுவாக இருக்கிறது. ஆர்எஸ் பேட்ஜ் வெறும் செயல்திறனை மட்டுமல்ல, அதற்கு மேலும் ஒரு அடையாளத்தை காட்டுகிறது. இது எங்கள் வாடிக்கையாளர்கள் ஸ்கோடா பிராண்டுடன் கொண்ட உணர்ச்சி பிணைப்பு மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது. ஸ்கோடா குடும்பத்தில் புதிய தலைமுறை ரசிகர்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இந்த சந்தையில் எங்கள் பிராண்டின் வலுவான மரபையும் ரசிகர்களின் ஆர்வத்தையும் தொடர்ந்தும் கட்டமைக்கிறோம். ஆக்டேவியா ஆர்எஸ் இன் மையத்தில் 2.0 டிஎஸ்ஐ டர்போசார்ஜ் செய்யப்பட்ட பெட்ரோல் எஞ்சின் உள்ளது. 7 ஸ்பீடு டிஎஸ்ஜி ஆட்டோமேடிக் டிரான்ஸ்மிஷனுடன் இணைந்த இந்த கார் 0–100 கிலோ மீட்டர் / எச் வேகத்தை வெறும் 6.4 நொடிகளில் அடைகிறது; மின்னணு முறையில் வரையறுக்கப்பட்ட அதிகபட்ச வேகம் மணிக்கு 250 கிமீ. அதன் மேம்பட்ட சேசிஸ் அமைப்பு, புரோக்ரெசிவ் ஸ்டியரிங் மற்றும் ஸ்போர்ட்ஸ் சஸ்பென்ஷன் நுட்பமான ஹேன்ட்லிங் மற்றும் சிறந்த ஓட்டும் அனுபவத்தையும் வழங்குகின்றன. புதிய ஆக்டேவியா ஆர்எஸ், ஸ்கோடாவின் வலிமையான வடிவமைப்பை வெளிப்படுத் துகிறது; முழு எல்இடி மேட்ரிக்ஸ் ஹெட்லைட்டுகள், டைனமிக் எல்இடி டெயில் லேம்புகள் மற்றும் பிளாக் ஸ்டைலிங் எலிமெண்ட்கள் இதனை மேலும் கவர்ச்சிகரமாகக் காட்டுகின்றன. ஆக்டேவியா ஆர்எஸ் வடிவத்தை 5 பிரகாசமான நிறங்கள் மேலும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. மாம்பா கிரீன், கேண்டி ஒயிட், ரேஸ் புளூ, மேஜிக் பிளாக் மற்றும் வெல்வெட் ரெட் ஆகிய நிறங்களில் கிடைக்கும். ஒவ்வொரு ஸ்கோடா காரையும் போல், ஆக்டேவியா ஆர்எஸ், க்கும் ஸ்கோடா ஆட்டோ இந்தியா வழங்கும் தொழில்துறையிலேயே சிறந்த உரிமையாளர் பயன்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 4 ஆண்டு / 1,00,000 கிலோமீட்டர் வாரண்டி மற்றும் 4 ஆண்டு இலவச ரோட்சைட் அசிஸ்டென்ஸ் அடங்கும். புதிதாய் வடிவமைக்கப்பட்ட ஆக்டேவியா ஆர்எஸ் எக்ஸ்ஷோரூம் விலை ரூ.49,99,000 ஆகும்.

வட்டார வள மையம் முதுகுளத்தூர் இல்லம் தேடி கல்வி தொடக்கநிலை மையத்தில் பணி புரியும் 109 தன்னார்வலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற்றது. இதில் முதுகுளத்தூர் வட்டார கல்வி அலுவலர் முருகேஸ்வரி,வட்டார வள மைய மேற்பார்வையாளர்(பொ) முருகேஸ்வரி, ஆசிரிய பயிற்றுனர் ம.ஸ்டெல்லா, ஆசிரிய பயிற்றுனர் கண்ணன், ஆசிரிய பயிற்றுனர் தினேஷ்குமார், வட்டார முன்னனி தன்னார்வலர் இளங்கம்மாதேவி மற்றும் ஆசிரிய பயிற்றுனர்கள், சிறப்பு ஆசிரியர்கள், கணினி விபரப் பதிவாளர் அனைவரும் கலந்துகொண்டு பயிற்சியே சிறப்பு செய்தனர்.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி **காலை 11:00 மணிக்கு** கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

ஏலத் தேதி 29.10.2025 அன்று காலை 11.00 மணி

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்
1	சென்னை	104142512815	வினோ ஏ ராஜ்

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

Altum Credo Home Finance

அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிட்.

பதிவு அலுவலகம்: தளம் எண்.7, கல்பதரு இன்பினியா, வார்தேவாடி, சிவாஜிநகர், புனே, மகாராஷ்டிரா, இந்தியா 411005.

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 (''சட்டம்'') விதி 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002ன் விதி 3(1)–ன் கீழ்

அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் (ACHFL) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக உள்ள கீழ்க் கையொப்பமிட்டவர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 (''மேற்கண்ட சட்டம்''), மேற்கண்ட சட்டப்பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002ன் விதி 3(1)–ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, அந்தச் சட்டத்தின் 13(2)–ன் கீழ் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார், கடனாளிகளை ["கூறப்பட்ட கடனாளிகள்"], அந்தந்த கோரிக்கை அறிவிப்பில் (களில்) குறிப்பிட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார். அவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கூறியவை தொடர்பாக, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள், அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் (ACHFLக்கு, சேர வேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை செலுத்துமாறு, மேற்கூறிய கடனாளிகளுக்கு மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், கூறப்பட்ட கோரிக்கை அறிவிப்பில்(களில்) விவரிக்கப்பட்டுள்ள கூடுதல் வட்டியுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி(கள்) முதல் பணம் செலுத்தும் தேதி வரை மற்றும்/அல்லது கடன் ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்படும் மற்ற ஆவணங்கள்/எழுத்துபூர்வமாக ஏதேனும் இருந்தால், அவையும் கடதாரர்களால் செலுத்தப்ப வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான உத்தரவாதமாக, பின்வரும் சொத்துக்கள் முறையே கூறப்பட்ட கடன்தாரரால்அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்கள் மற்றும் கடன் கணக்கு எண் (LAN)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை மற்றும் என்பிஏ தேதி
1) பிருந்தாதேவி (விண்ணப்பதாரர்) 2) குருநாதன் பெரியசாமி (உடன் விண்ணப்பதாரர்) கடன் கணக்கு எண்: 1322020100047 & 13220432300034	டிமாண்ட் நோட்டீஸ் தேதி: 22 ஆகஸ்ட் 2025 கடன் கணக்கு எண். 1322020100047–க்கு ரூ. 6,53,984/ – (ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு மட்டும்) கடன் கணக்கு : 13220432300034–க்கு ரூ.384396/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்து நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்) என்பிஏ :29/07/2025

ஈடுபெற்ற சொத்துகளின் விவரம் (அசையா சொத்து): சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சொத்தின் விஸ்தீரணம் 1219 சதுர அடி. மனை எண்.10, தற்போதைய துணைப்பிரிவு புதிய புஞ்சை ச.எண். 527/13, புதிய கூட்டு பட்டா எண். 11196 பழைய ச.எண். 527/3B1A1 உடன் தொடர்புடையது, பட்டா எண். 1483, பழைய ச.எண். 527/3B1 உடன் தொடர்புடையது, மனை எண். 8 & 10ன் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது, கிழக்குத் தக்கு நிலத்தின் தெற்குப் பகுதியில் 77 சென்ட்களில் அமைந்துள்ளது, ச. எண். 527/3 வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு உள்ளது.இந்த சொத்து திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, அடியானூந்து கிராமத்தின் எல்லைக்குள், நாக்லநாயக்கன்பட்டி சார் பதிவு மாவட்டத்தின் அதிகார வரம்பிற்குள், திண்டுக்கல் பதிவு மாவட்டம் மற்றும் எல்லையில் உள்ளது. கிழக்கு: 14 அடி அகலம் தெற்கு வடக்காக பொதுச் சாலை. மேற்கு: மனை எண்கள் 11 & 16 வடக்கு: மனை எண் 8 கருப்பையாவுக்குச் சொந்தமானது தெற்கு: புஞ்சை நிலம் யாகப்பனுக்குச் சொந்தமானது.

தேதி : 18.10.2025 ஒப்பம்/–

இடம்: திண்டுக்கல் **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

அல்டம் கிரெடோ ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் (ACHFL)

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8(6) மற்றும் 9(1)ன் கீழ் ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சாஃஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்:

கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது **https://www.cholamandalam.com & www.auctionfocus.in**

வ எண்	(ஏ)	(பி)	(சி)	(டி)	(இ & எப்)	(ஜி)
	கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	மீட்க வேண்டிய பாக்கி (ஏ/எல்) (ஈடுபெற்ற ஆஸ்திகள்)	அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	சுவாதீன வகை	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)முன் வைப்புத் தொகை (ரூ.)	ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்). : X0HLNAE00002310188 1. திரு/திருமதி. ஒழினிலா டி 2. திரு/திருமதி. சுதாகரன் ஏ முகவரி எண். 1 & 2: 10 –13E/1, செட்டியேல வீடு தொழிக்கோடு, விளவங்கோடு, தமிழ்நாடு 629157 மேலும் : மறு சர்வே எண்: 57/7A, மிடாலம் கிராமம் கருங்கல் டவுன் பஞ்சாயத்து ஜேடி மருத்துவமனை விளவங்கோடு, தமிழ்நாடு 629157	14/03/2025 அன்று மொத்த நிலுவைத் தொகை ரூ. 20,37,424/- (ரூபாய் இருபது லட்சத்து முப்பத்தேழாயிரத்து நானூற்று இருபத்து நான்கு மட்டும்)	கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், கருங்கல் சார் பதிவு மாவட்டம், விளவங்கோடு தாலுகா, மிடாலம் ஏ கிராமம், கருங்கல் பேரூராட்சி, மறு சர்வே எண்: 57/7A, 131.53 சதுர மீட்டருக்கு சமமான 3.250 சென்ட் பரப்பளவு கொண்ட நிலம், கதவு எண்: 1013E/1 மற்றும் EB இணைப்பு எண்: 071920032084 உடன் நிலம் மற்றும் ஏற்கனவே உள்ள வீடு, பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: வடக்கு: சொத்து கதாகறனுக்கு சொந்தமானது, தெற்கு: பாதை, கிழக்கு: சொத்து லாசருக்கு சொந்தமானது, மேற்கு: சொத்து திவாகரனுக்கு சொந்தமானது.	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	ரூ.12,14,375/ – (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து பதினான் காயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து மட்டும்) ரூ.1,21,437/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தோராயிரத்து நானூற்று முப்பத்தியேழு மட்டும்)	06-11-2025 அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டென்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)

*** ஆய்வு தேதி & நேரம் : 04.11.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** *** குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/ –**

***ஏலம் / இஎம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 05.11.2025 அன்று மாலை 5.00 மணிவரை**

*** பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன.**

சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், **திரு. அகின் ஷேஷல்ஸ் அவர்களை அவரது மொபைல் எண்.8925502237 & மின்னஞ்சல்:** akinsa@chola.murugappa.com/**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அதிகாரி, திருமதி. சோமல் சர்மா அவர்களை 8870464652 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.** சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

ஒப்பம்/–

தேதி : 17.10.2025 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

இடம்: கன்னியாகுமரி, தமிழ்நாடு **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக**